**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 321 of 2026 |

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : மகாலெட்சமி

Father's Name : க/பெ. புஷ்பராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of June** 2026.

**(1,2 எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது கணியூரில் வசித்து அரசு பள்ளியில் தற்காலிக பணியாளராக வேலை வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் துரைகண்ணு காட்டில் எனது குழந்தைகள் விளையாட சென்றபோது யாரோ ஒருவர் ஏன் இங்கு வந்து விளையாடுகிறீர்கள் என்ற கேட்டதாக என் மகள் என்னிடம் சொன்னதால் நான் என்னவென்று கேட்பதற்காக சென்ற போது என்னை தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார்கள். அதனால் நான் சந்தேகத்தின் பேரில் எதிரி மீது புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் புகார் நான் அளித்தது தான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையதாகும். புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 31.07.2023ம் தேதி சுமார் 05.00 மணியளவில் எனது வீட்டின் அருகே உள்ள தைரைக்கண்ணு காட்டில் எனது குழந்தைகள் விளையாட சென்றபோது அங்கு மாடு மேய்த்துக்கொண்டிருந்த சரஸ்வதி அவரது பேரன் விக்னேஷ் ஆகியோர்கள் ஏன் இங்கு வந்து விளையாடுகிறீர்கள் என்று கேட்டதாக என்து மகன் என்னிடம் சொன்னார் என்றும், அங்கு செல்ல அங்கிருந்த சரஸ்வதி வேப்பங்கொட்டை பொறுக்கும் இடத்தில் இங்கு என்ன விளையாட்டு என்று பேசிக்கொண்டிருக்கும் போது சரஸ்வதியின் மகன் கருப்புசாமி என்னைப் பார்த்து கெட்டவார்த்தையால் திட்டினார் என்றும், கருப்புசாமி, விக்னேஷ், மற்றும் கன்னியம்மாள் ஆகியோரும் தாக்கி என்னை கெட்டவார்த்தையால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் அதனால் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது என்று எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியால் எதிரிகளுக்கு ஆதரவாக மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. **மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness** (**Sd/- T. Arunkumar**)

**Judicial Magistrate**,

**Sulur**.